1994 ஏப்ரல் 7] [திரு. எஸ். கண்ணப்பன்]

கண்சிடர் பண்ணுவது வழக்கமாக உள்ளது. ஏற்கெனவே இருக்கிற பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் இல்லாமல் புதிதாகக் கொடுத்தால், அதிலே பிரச்சினைகள் உருவாகும். ஆகவேதான் நான் ஏற்கெனவே அது பற்றி தெரிவித்து இருக்கிறேன். அந்தப் பகுதியிலே குடகனாற்றில் இருக்கிற தண்ணீரும் போதுமான அளவு இல்லை என்பதையும் சொல்லியிருக்கிறேன். ஆனால் அந்தப் பகுதி வறட்சிப் பகுதி என்பதற்காக பாசனப் பகுதி தண்ணீரை இதிலே திறந்து விடுவதற்கு வாய்ப்பு இருக்காது. ஏனென்றால் மற்றவர்கள் ஆட்சேபிப்பார்கள். ஆகவே இருக்கிற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு அதிகாரிகளிடத்திலே அந்த சுற்றுப்புறத்திலே இருக்கிற குடிநீர்ப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஏதாவது இதன் மூலம் செய்யலாமா என்று ஒரு விவர அறிக்கையைப் பெற்று அதற்குப் பின்னாலே இந்த அரசு ஏதாவது நடவடிக்கை எடுப்பதற்கான முயற்சிகளில் இறங்கும் என்பதை மாத்திரம் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஆ) புதுக்கோட்டை மாவட்ட மில்களில் கடலை, அரிசி, எடைபோடுவதற்கு 'ஸ்கேல்' முறை அமுல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. சி. சுவாமிநாதன், திரு. எஸ். சண்முகநாதன் மற்றும் திரு சி. குழந்தைவேலு ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள். திரு. சி. சுவாமிநாதன்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டத்தில் அனைத்து மில்களிலும் கடலை, அரிசி எடை போடுவதற்கு 'ஸ்கேல்' முறையை அமுல்படுத்துவது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

***மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்து விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

அறிக்கை

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் 63 ஆயில் மில்களும், 22 அரிசி மில்களும் ஆக மொத்தம் 85 மில்கள் உள்ளன. இதில் 42 மில்களில் விட்டத் தராசு பயன்படுத்தப்படுகிறது. 43 மில்களில் மேடைத் தராசு

[திரு. ஏ. எம். பரமசிவன்] [1994 ஏப்ரல் 7

மற்றும் விட்டத் தராசுகள் பயன்படுத்தப்படுகின்றன. இந்த மில்களில் உள்ள எடைக்கல், விட்டத் தராசு மற்றும் மேடைத் தராசுகளை ஆண்டுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்து அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட எடையளவு ஆய்வாளர்களால் மறுமுத்திரையிடப்பட்டு வருகின்றன.

2. 1985 ஆம் ஆண்டு எடையளவு தரம் (அமுல்) சட்டத்தின் கீழ் மேடைத் தராசுகளை மட்டும்தான் பயன்படுத்த வேண்டும் என நிர்ப்பந்திக்க வழிவகையில்லை. விட்டத் தராசுகளும் அங்கீகரிக்கப்பட்ட தராசு வகைகளில் ஒன்றுதான். எனவே, அவற்றை உபயோகப்படுத்துவதை தடை செய்ய முடியாது. எவ்வகை தராசாக இருப்பினும் அவை முறையாகப் பயன்படுத்தப்பட வேண்டும். முறைகேடாகவோ அல்லது நுகர்வோர் நலன் பாதிக்கக்கூடிய வகையில் மோசடியாகவோ பயன்படுத்தப்பட்டால், அவற்றைப் பறிமுதல் செய்து நடவடிக்கை எடுப்பது அமுலாக்கப் பணியாளர்களின் பணியாகும்.

3. இந்த மில்களில் அடிக்கடி ஆய்வுகள் மேற்கொண்டு முறைகேடுகள் ஏதும் நடக்கா வண்ணம் கண்காணிக்கும்படி திருச்சி தொழிலாளர் ஆய்வர், புதுக்கோட்டை தொழிலாளர் துணை ஆய்வர் மற்றும் அறந்தாங்கி தொழிலாளர் உதவி ஆய்வாளர் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

திரு. சி. சுவாமிநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடியில் மொத்தம் 63 ஆயில் மில்களும் 22 அரிசி மில்களும், மொத்தம் 85 மில்கள் இருப்பதாக அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள். அதிலே 42 மில்களில் விட்டத் தராசு பயன்படுத்தப்படுவதாகவும் 43 மில்களில் மேடைத் தராசு பயன்படுத்தப்படுவதாகவும் அறிக்கையில் சொல்லியிருக்கிறார்கள். அதிலே 85 மில்களில் அரிசி ஆலைகளும், ஆயில் மில்களும் கடலை அரைக்கின்ற மெஷின்களும் இருக்கின்றன. கடலை அரைவை செய்கின்ற அத்தனை ஆலைகளிலும் அவர்கள் விட்டத் தராசைப் பயன்படுத்துகிறார்கள். காரணம் விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற கடலை-புதுக்கோட்டை, பட்டுக்கோட்டை தஞ்சையில் ஒரு பகுதி ஆக அடங்கிய ஒரு பெரிய மார்க்கெட் செண்டர் ஆலங்குடி. விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற அனைத்து கடலைகளும் அங்கே கொண்டு வந்து தான் அவர்கள் எடைபோட்டு வியாபாரம் செய்கிறார்கள். அதற்கு கடலை மில்களில் மட்டும் அவர்கள் விட்டத் தராசைப் பயன்படுத்துவதால் ஏற்கெனவே பல ஆண்டுகளாக அங்கே இருக்கிற விவசாயச் சங்கங்கள், விவசாயிகள் அத்தனைபேரும் கடலை மில்களில் விட்டத் தராசை பயன்படுத்துவதால்

முறையாக அதை எடை போடவில்லை, ஒரு அங்குலம் இடைவெளி வைத்து விவசாயிகளை ஏமாற்றுகிறார்கள். ஒரு மூடைக்கு 10 கிலோ, 5 கிலோ என்று அவர்கள் முறைகேடாக எடை போட்டு விவசாயிகளைக் கொள்ளை அடிக்கிறார்கள் என்ற கோரிக்கை பல ஆண்டுகளாக அந்தப் பகுதியிலே இருக்கிற விவசாயிகள் மத்தியில் பெரும் குறையாக இருக்கிறது. பத்து தினங்களுக்கு முன்பு கூட விவசாயப் பெருங்குடி மக்கள் ஒன்று சேர்ந்து வருகின்ற காலங்களிலாவது மேடைத் தராசை நல்ல முறையில் அமைத்து விவசாயிகளுக்கு சரியான எடைபோடுவதற்கு நீங்கள் எல்லாம் உதவ வேண்டும், புதுக்கோட்டையிலே இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனை பேரும் உதவ வேண்டும் என்று எங்களிடம் கோரிக்கைகளை கொடுத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் நாங்கள் 3 சட்டமன்ற உறுப்பினர்களும் இந்தக் கோரிக்கையை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம். இப்போது கம்ப்யூட்டரைஸ்டு முறையில் துல்லியமாக எடைபோடுகிற முறைகள் வந்திருக்கிறபோது 50, 60 ஆண்டுகளுக்கு முன்பு துவங்கப்பட்ட விட்டத் தராசை வைத்துக்கொண்டு எடைபோடுவது விவசாயிகளுடைய மனதை புண்படுத்துவதோடு விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களை கொள்ளை அடிக்கின்ற சூழ்நிலையையும் ஏற்படுத்துகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியாகக் கேளுங்கள்.

திரு. சி. சுவாமிநாதன்: தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்கள் அனைத்து மில்களிலும் மேடை தராசுகளை, நவீன மயமாக்கப்பட்ட தராசுகளை அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்களுடைய பொற்கால ஆட்சியில் விவசாயிகள் மட்டுமல்ல, ஏழை எளிய மக்கள் யாவரும், எந்த வகையிலும் பாதிக்கப்படாத வகையில் எடை அளவைச் சட்டம் அமல் செய்யப்பட்டுள்ளது. பொதுவாக வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் எடைக்கல், விட்டத் தராசு மற்றும் மேடைத் தராசுகள் அனைத்தும் ஆண்டுக்கு ஒரு முறை மறுபரிசீலனை செய்யப்பட்டு எடையளவு ஆய்வாளர்களால் மறு முத்திரையிடப்பட்டு முறைகேடுகள் நிகழா வண்ணம் விவசாய நலன் பாதுகாக்கப்படுகின்றன. விட்டத் தராசுகள் அங்கீகரிக்கப்பட்ட தராசு வகைகளில் ஒன்றாகும். அவற்றை உபயோகப்படுத்த தடை செய்ய முடியாது. இருப்பினும் அவை முறைகேடாக பயன்படுத்தப்பட்டால் அவை பறிமுதல செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1994 ஏப்ரல் 7

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். சண்முகநாதன்.

திரு. எஸ். சண்முகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழகத்திலே ஆலங்குடியில்தான் கடலை மில்கள் அதிகமாக இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. பொள்ளாச்சிக்கு அடுத்தபடியாக அங்கே மிகப்பெரிய மார்க்கெட் இருக்கிறது. அங்கே விவசாயிகளுக்கும், கடலை மில் முதலாளிகளுக்கும் இடையே நீண்ட நாட்களாக தகராறு இருந்து வருகிறது. இங்கே நம்முடைய குறிப்பிலே 63 ஆயில் மில்களும், 22 அரிசி மில்களும் இருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள். அங்கே, கிட்டதட்ட 150-க்கு மேற்பட்ட மில்கள் இயங்கி வருகின்றன. 43 மில்களில் மேடைத் தராசு பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதே சமயத்தில் அங்கே எடை போடுவதில் ஸ்கேலும் முன்னுரிமை அளித்து வைத்துக் கொண்டிருக்கிறார்கள். கடலை எடை போடுவதில் தான் விவசாயிகளுக்கும் உரிமையாளர்களுக்கும் இடையே தகராறு ஏற்படுவதன் காரணமாக கடலை அளவைக்கு மட்டுமாவது முன்னுரிமை அடிப்படையிலே அந்த ஸ்கேல் அளிப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடியில் ஏறத்தாழ 85 மில்கள் இருக்கின்றன. அவற்றில் 63 ஆயில் மில்களும், 22 அரிசி மில்களும் இருக்கின்றன. அவற்றில் ஒழுங்கான முறையில் எந்த முறைகேடும் நிகழாத வண்ணம் அங்கே இருக்கின்ற திருச்சி தொழிலாளர் ஆய்வாளர் அவர்களும், புதுக்கோட்டை தொழிலாளர் துணை ஆய்வாளர் அவர்களும், அறந்தாங்கியில் உள்ள தொழிலாளர் உதவி ஆய்வாளர் அவர்களும் அங்கே சென்று பார்வையிட்டு எந்த முறைகேடும் இருக்கக் கூடாது, விட்டத் தராசாக இருந்தாலும் மேடைத் தராசாக இருந்தாலும் ஒழுங்கான முறையில் பராமரிக்கப்படுகின்றனவா என்பதைக் கண்டறிய இந்த ஆண்டு மட்டும் 8 தடவை பரிசோதனை செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஒழுங்கான முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு நல்லபடியாக இயங்குவதாக செய்திகள் வந்திருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சி. குழந்தைவேலு.

திரு. சி. குழந்தைவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஸ்கேல் மூலம் எடை போடும் முறையை ஏற்காவிட்டாலும் விட்டத் தராசு மூலம் எடை போடும்போது 80 கிலோவுக்கு பதில் 90 கிலோ மற்றும் 100 கிலோ எடைபோட்ட

1994 ஏப்ரல் 7] [திரு. சி. குழந்தைவேலு]

மூட்டைகளை விவசாயிகள் கண்டுபிடித்து சரியான தகவல் கொடுக்க அங்கு ஒரு அதிகாரி தலைமையில் ஆலங்குடியில் ஒரு மையம் அமைத்து, முறைகேடாக எடைபோட முயற்சி செய்யும் முதலாளிகள் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினருடைய யோசனை பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அறிக்கைகள் அளித்தல்

பொது நிறுவனங்கள் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகளை அளித்தல். திரு. கே. முனிவெங்கடப்பன், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

திரு. கே. முனிவெங்கடப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் சார்பாக குழுவின் 155, 156,157 ஆவது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்.

4. அறிவிப்புகள்.

(அ) மிகைச்செலவிற்கான மானியக் கோரிக்கைகள், 1985-86- முன்மொழிதல் (ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1985-86 ஆம் ஆண்டின் மிகைச் செலவிற்கான மானியக் கோரிக்கைகளை பேரவையில் முன்மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது:

``In pursuance of Clause I of Article 205 read with Clause 3 of Article 203 of the Constitution of India, I, M. CHANNA REDDY, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly of the Demands for Grants in respect of the amounts spent on certain services and purposes during the financial year 1985-86 in excess of the amounts authorised or granted for those services and purposes and for that year".